**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 114/2019**

பெயர் : கவிதா P.W.2.

க/பெ. : பாஸ்கர ராஜேந்திரன்

தேதி : 01.09.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை: –**

1. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் நாங்கள் குடியிருக்கும் வீட்டிலிருந்து எங்களை காலி செய்யக்கூடாது என கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்களை யார் வழக்கறிஞரிடம் கூறினார்கள் என்றால் எனது கணவர் தான் கூறினார். நத்தம் புல எண். 176/1A ல் 39 1/4 செண்ட் மற்றும் புஞ்சை புல எண். 179/5 ல் 19 செண்ட் ஆகிய இரண்டு சர்வே எண்களில் உள்ள இடங்களும் சிவக்குமார் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2. சிவக்குமாருக்கு பாத்தியப்பட்ட மேற்படி சொத்துகளை 4ம் பிரதிவாதி நூர்ஜகான் பதிவு செய்யப்பட்டகிரய ஆவணம் மூலம் சிவக்குமாரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். செம்பனார்கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 124/1994 என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4ம் பிரதிவாதியான நூர்ஜகான் என்பவருக்கு சொந்தமான சொத்தினை 5ம் பிரதிவாதி முரளிதரன் என்பவர் 06.06.2011ம் தேதியில் கிரயம் வாங்கியுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 5ம்பிரதிவாதி மேற்படி சொத்தை கிரயம் வாங்கும் போது உரிய மறுபயன்கொடுத்து வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. 5ம் பிரதிவாதி வாங்கிய கிரய ஆவணம் செம்பனார்கோவில் சார் பதிவாளர் அலுவலகத்தில் 1188/2011 ஆவணமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தின் படி சொத்துரிமையாளர் 5ம் பிரதிவாதி என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி கிரயம பெற்ற கிரய ஆவணத்தில் கண்டுள்ள புல எண்ணை குறிப்பிட்டு தான் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் இல்லை. தாவா சொத்து எனக்கோ அல்லது எனது கணவருக்கோ சொந்தமானது என்பதை காட்டக்கூடிய பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டாவை தாக்கல் செய்துள்ளோம்.

4. தாவா சொத்தை பட்டாவின் அடிப்படையில் தான் நாங்கள் உரிமை

கோருகிறோம் என்றால் சரிதான். எங்களுக்கு 2ம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட பட்டா தவறானது என உரிய விசாரணை மேற்கொண்டு ந.க. 1203/2015/ஆ3ன் படி 10.03.2015ல் 3ம் பிரதிவாதியான கோட்டாட்சியரால் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதியால் 10.03.2015 ல் வழங்கப்பட்ட உத்தரவின் பேரில் நானோ அல்லது எனது கணவரோ நாளது தேதி வரை எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா ரத்து செய்யப்பட்ட விரபம் எங்களுக்கு தெரியாததால் மேல்முறையீடு செய்யவில்லை. எங்களுக்கு வழங்கப்பட்ட ரத்து செய்து விட்டு கோட்டாட்சியர் அவர்கள் 5ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா மாறுதல் செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. தாவா சொத்திற்கு அருகில் எங்களுக்கு வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டுக்கு மிண் இணைப்பு, வீட்டு வரி ரசீது உள்ளதா என்றால் உள்ளது. தாவா வீட்டிற்கு அருகில் உள்ள எங்களது வீட்டின் மின் கட்டண ரசீது மற்றும் வீட்டு வரி ரசீதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கானது இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ 2 ஆன பட்டா 3ம் பிரதிவாதியால் ரத்து செய்யப்பட்டுவிட்டதால் அந்த ஆவணம் செல்லக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. ரத்துசெய்யப்பட்ட பட்டாவின் மூலம் நானோ அல்லது எனது கணவரோ எவ்வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

6. நான் எனது வழக்குரையில் 2,3 பிரதிவாதிகள் எனது பெயருக்கு வழங்கிய பட்டாவை ரத்து செய்யக்கூடாது என நான் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து 4,5 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி தாவா சொத்தின் உரிமையாளர் என்றாலும், அதனால் சொத்தின் உரிமையாளர்களுக்கு எதிராக நான் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்களுக்கு பாத்தியபட்டது என்பதற்கான பதிவு செய்யப்பட்ட உரிமை மூல ஆவணங்கள் எதையும் நாங்கள் தாக்கல் செய்யாததால் நாங்கள் கோரியுள்ள பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான புல எண்ணை தவறாக குறிப்பிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவமானது பதிவு செய்யப்பட்ட உரிமை மூல ஆவணம் மூலம் 5ம் பிரதிவாதியின் வசத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

7. தாவா சொத்தின் வசமானது என்னிடமோ, எனது கணவரிடமோ எந்த காலத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து 5ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால் அதில் 5ம் பிரதிவாதி அத்துமீறி நுழைய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை 5ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்வதற்கு எவ்வித வழக்குமூலமும் இல்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு சொந்தமான இடத்திற்கு அருகில் தாவா சொத்து உள்ளதால் நாங்கள் நீதிமன்றத்தை துஷ்பிரயோகம் செய்து உத்தரவு பெற்று தாவா சொத்தை அபகரித்துகொள்ளலாம் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் நாங்கள் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் சட்டப்படி எங்களுக்கு கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல.